**SC.323/17 PW13 சுமதி 12.4.18**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

கு வி -- அனைத்து எதிரிகள் தரப்பில்

நான் எதிரி லாவன்யாவை கைது செய்ய போன போது எங்களுடன் ஆய்வாளர் மணிகண்டன் இருந்தார். மற்றும் கோவிந்தன், தனசேகரன் ஆகியோர்கள் இருந்தனர். 2.3.17 அன்று காலை6 மணியளவில் நாங்கள் நால்வரும் காவல் நிலையத்திலிருந்து கிளம்பி போனோம். நடந்து தான் போனோம். லாவன்யாவின் வீடு எங்கள் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ளது. நாங்கள் செல்லும் போது லாவன்யா வீட்டில் தான் இருந்தார். ஆய்வாளர் கைது செய்தார். பெண் என்பதால் நான் உடன் இருந்தேன். லாவன்யா கைது செய்யும் போது அவர் தாயாரிடம் தகவல் சொன்னேன். லாவன்யா கைது செய்யும் போது சாட்சிகள் 2 நபர்கள் முன்பு கைது செய்யப்பட்டார். அவர் வாகனம் , செல்போன் கைப்பற்றப்பட்டன. லாவன்யா கைது செய்தது பற்றிய தகவல் கொடுத்து வேறு யாரிடமும் கையெழுத்து பெற்றோமா என்றார் தெரியாது. லாவன்யாவை கைது செய்த போது எந்த பேப்பரிலும் கையெழுத்து பெறப்பட்டதா என்றால் தெரியாது. அத்தாட்சியில் லாவன்யாவிடம் கையெழுத்து வாங்கினோம். வேறு யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை. அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை. லாவன்யாவை கைது செய்த பின்பு அவரை காவல் நிலையம் அழைத்து சென்றோம். நாங்கள் காலை 6 மணிக்கு

நிலையத்திலிருந்து கிளம்பி 7.45 மணிக்கு நாங்கள் காவல் நிலையம் வந்து விட்டோம். ஆய்வாளர் லாவன்யாவை என் முன்பு வைத்து விசாரித்தார். அங்கு என்னை தவிர வேறு யாருமில்லை. லாவன்யா வாக்குமூலம் கொடுத்த போது காலை 8 மணியிருக்கும். சுமார் முக்கால் மணி நேரம் வாக்குமூலம் கொடுத்தார். ஆய்வாளர் மணிகண்டன் , லாவன்யா கொடுத்த வாக்குமூலத்தை கைப்பட எழுதினார். பின்பு அது தட்டச்சு செய்யப்பட்டது. எங்கள் காவல் நிலையத்தில் வைத்தே கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட 2 சக்கர வாகனத்தை உருட்டி கொண்டு காவல் நிலையம் வந்தோம். கைப்பற்றப்பட்ட செல்போன் லாவன்யாவின் கையில் இருந்தது. அவர் வீட்டில் வைத்து செல்போனை கைப்பற்றினோம். கைது செய்யும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பின்பற்றவில்லை என்றால் தவறு. பெண்ணை கைது செய்யும் போது சட்டபடியான நடைமுறைகளை பின்பற்றவில்லை என்றால் தவறு. காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம வி --

இல்லை.